கல்விக்கான குரல்

மலாலா யூசுப்சாயின் கதை

ரெபேக்கா லாங்ஸ்டன்-ஜார்ஜ்
படங்கள் : ஜன்னா போக்



கல்விக்கான குரல்

மலாலா யூசுப்சாயின்

கதை

ரெபேக்கா லாங்ஸ்டன்-ஜார்ஜ்
படங்கள் : ஜன்னா போக்




17 வயது மட்டுமே ஆன 5 அடிக்கும் குறைவான, பாகிஸ்தானைச் சேர்ந்த பள்ளி மாணவி ஒருவர் மேடை ஏறினார். அவளுடைய தைரியம் புகழ்பெற்றது. உலகத் தலைவர்கள் அவளது பேச்சைக் கேட்க எதிர்பார்த்து இருந்தனர். ஒஸ்லோ-நார்வேயில் அமைதிக்கான நோபல் பரிசை மலாலா யூசுப்சாய் ஏற்றுக்கொண்டபோது, கேமராக்கள் உலகம் முழுவதும் அவளது செய்தியை எடுத்துச் சென்றன.


அவளது சொந்த நாட்டில், ஒரு பெண் மேடையில் பேசினால் அடிக்கப்படலாம். ஆனால் மலாலா பயப்படவில்லை. வலிமையும், சக்தியும், தைரியமும் அவளுக்குள் நிறைந்திருந்தன. டிசம்பர் 10, 2014 அன்று அமைதிக்கான நோபல் பரிசு வென்ற இளையவர் ஆனார். மலாலா எல்லா குழந்தைகளின் குரலாகவும் தோன்றினார்.

"இந்த விருது எனக்கானது மட்டுமல்ல. கல்வியை விரும்பும் மறக்கப்பட்ட குழந்தைகளுக்கானது இது. அமைதியை விரும்பும் அச்சமடைந்த குழந்தைகளுக்கானது இது. மாற்றத்தை விரும்பும் குரலற்ற குழந்தைகளுக்கானது இது."

சமமான கல்விக்கான குரலாக மலாலா மாறினார். அதற்காக தன் உயிரையே இழக்கவும் இருந்தாள்.



மலாலாவின் கல்வி இளம் பருவத்திலேயே தொடங்கியது. அவரது தந்தை, ஜியாவுதீன் யூசுப்சாய், பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத்தாக்கில் பனி மூடிய மலைகளால் சூழப்பட்ட மிங்கோரா நகரில் ஒரு பள்ளியை நடத்தி வந்தார். அவள் நடக்க தெரிந்ததில் இருந்து வகுப்புகளுக்குச் சென்றாள், பாடம் கற்பிப்பது போல் பாசாங்கு கூட செய்தாள். மலாலா பள்ளியை மிகவும் விரும்பினார்.



அனைத்து பாகிஸ்தானிய குழந்தைகளுக்கும் மலாலாவுக்கு கிடைத்த வாய்ப்பு கிடைக்கவில்லை. பல குடும்பங்களால் பள்ளிக்கு கட்டணம் செலுத்த முடியவில்லை. மற்றவர்கள் தங்கள் மகன்களின் கல்விக்கு மட்டுமே பணம் செலுத்தினர். அந்த பெற்றோர்கள், மகள்கள் சமைக்கவும் வீட்டைப் பராமரிக்கவும் வேண்டும் என்று நினைத்தனர்..




மலாலாவின் சொந்தத் தாய்க்கு சிறுவயதில் எழுதவோ படிக்கவோ தெரியாது. ஆனால் மலாலாவின் தந்தை, ஆண்களைப் போலவே பெண்களும் கல்விக்கு தகுதியானவர்கள் என்று நம்பினார். அவர் மலாலா, அவரது இளைய சகோதரர்கள் குஷால் மற்றும் அடல் ஆகியோரை படிக்க ஊக்குவித்தார். பல ஏழைக் குழந்தைகளையும் தனது பள்ளியில் இலவசமாகப் படிக்க வைத்தார்.

மலாலா கல்வியில் சிறந்து விளங்கினார். அவர் கடுமையாக உழைத்து பல கோப்பைகளையும் விருதுகளையும் பெற்றார். அவளால் தன் தாய்மொழியான பாஷ்டோ மொழியைப் பேசவும் எழுதவும் தெரிந்தது மட்டுமின்றி, அவள் சரளமாக ஆங்கிலம் மற்றும் பாகிஸ்தானின் தேசிய மொழியான உருது மொழியையும் பேசினாள்.








ஆனால் அப்பகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருந்த தாலிபான் தலைவர்கள் பெண்கள் பள்ளிக்கு செல்ல அனுமதிப்பதை எதிர்த்தனர். சிறுவர்களும் சிறுமிகளும் பிரிக்கபட வேண்டும் என்று அறிவித்தனர். அவர்கள் பெண் கல்வியை தடை செய்யவும் விரும்பினர். பெண்களின் உடலையும் முகத்தையும் மறைக்கும் வகையில் பர்தா எனப்படும் ஆடைகளை அணியுமாறு கட்டாயப்படுத்தவும் முயன்றனர்.

தாலிபான் உறுப்பினர்கள் பள்ளித் தலைவர்களை மிரட்டினர். சிறுமிகள் மற்றும் சிறுவர்கள் ஒரே நுழைவாயிலைப் பயன்படுத்தியதால், ஜியாவுதீனுக்கு பள்ளியை மூட ஒருவர் உத்தரவிட்டார். மலாலாவின் தந்தை மறுத்ததால், போராடிய ஆசிரியர்கள் சிலர் வெளியேறும் வரை தாலிபான்கள் அவர்களை அச்சுறுத்தினர்.





ஜியாவுதீன் கவலை அடைந்தார். ஆனால் மலாலா பயப்படவில்லை. "ஸ்வாட்டின் பெண்கள் யாருக்கும் பயப்படுவதில்லை." பள்ளியில் வெற்றி பெற வேண்டும் என்பதில் அவள் முன்னெப்போதையும் விட உறுதியாக இருந்தாள். பள்ளி விடுமுறை நாட்களில் பெரும்பாலான பாகிஸ்தானிய பெண்கள் தங்கள் கைகளில் பூக்கள் செடிகொடிகளை வரைந்து கொண்டிருந்தனர். மலாலாவோ அறிவியல் சூத்திரங்களால் கைகளை நிரப்பிக்கொண்டிருந்தார்.

வன்முறை மிரட்டல்கள் மூலம் தாலிபான்கள் ஒவ்வொரு நாளும் வலுப்பெற்றனர். அவர்களின் பலம் பெருக, விதிகளும் அதிகரித்தன. ஆண்கள் க்ஷவரம் சசெய்யக்கூடாது. பெண்கள் முகத்தை மறைக்க வேண்டும். திரைப்படங்கள் தடை செய்யப்பட்டன. ஸ்வாட் பள்ளத்தாக்கு முழுவதும் வானொலிகள் தாலிபான் பிரசங்கத்தை ஒலித்தன.





மலாலாவின் தாயகத்தில் அச்சம் பரவியது. ஒரு காலத்தில் நிரம்பியிருந்த வகுப்பறைகளில் இப்போது பல இருக்கைகள் காலியாக இருந்தன. தாலிபான் தலைவர்கள் தங்கள் வற்புறுத்தலுக்கு பணித்தவர்கள் பற்றி வானொலியில் பெருமையாக கூறினர். "பள்ளிக்கு செல்வதை நிறுத்திவிட்ட ஆதாப் தரீனை வாழ்த்துகிறோம்".



ஜியாவுதீன் இதை எதிர்த்து போராடினார், கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்த தொலைக்காட்சியில் தோன்றினார். அவருடன் மலாலாவும் வந்தார். ஒரு நிருபர் அவரிடம் கருத்து கேட்டபோது, மலாலா கூறினார். "எவ்வளவு தைரியம் இருந்தால், என்னுடைய அடிப்படை உரிமையான கல்வியை தாலிபான்கள் பறிக்கக் கூடும் !"

பின்னர் பள்ளி வாசலில் ஒரு கடிதம் ஒட்டப்பட்டு இருந்தது "... நீங்கள் நடத்தும் பள்ளி மேற்கத்திய பள்ளி... நீங்கள் பெண்களுக்குக் கல்வி பயில்விக்கிறீர்கள்... இதை நிறுத்துங்கள், இல்லையெனில் நீங்கள் கஷ்டத்துக்கு உள்ளாவீர்கள்..."








அச்சுறுத்தல்கள் மலாலாவை பயமுறுத்தவில்லை. அவளும் அவளது தந்தையும் பெண்களுக்கு சமமான கல்வியை கோரி வந்தனர். அவர்கள் சங்கங்களுடன் பேசினார்கள், செய்தித்தாள்களுக்கு கடிதங்கள் எழுதினார்கள், பத்திரிகையாளர்களை அழைத்தார்கள். "இந்த புதிய தலைமுறைக்கு பேனா வழங்கப்படாவிட்டால், பயங்கரவாதிகளால் அவர்களுக்கு துப்பாக்கிகள் வழங்கப்படும்" என மலாலா எச்சரித்தார்.

ஆனால் நிலைமை மோசமாகியது. தாலிபான் உறுப்பினர்கள் இயந்திர துப்பாக்கிகளுடன் தெருக்களில் ரோந்து செல்ல ஆரம்பித்தனர். ஊரடங்கு உத்தரவை மீறியவர்களை அடித்தனர். இரவில் குண்டுகள் வெடித்தன. தாலிபான் விதிகளைப் பின்பற்றாத வணிக வளாகங்கள் காலையில் இடிபாடுகளின் குவியல்களாக இருந்தன.

பின்னர், டிசம்பர் 2008 இல், பயங்கரமான வானொலி அறிவிப்பு வந்தது. "அனைத்து பெண் பள்ளிகளும் மூடப்படும். ஜனவரி 15 ஆம் தேதி முதல் பெண்கள் யாரும் பள்ளியில் அனுமதிக்கப்பட மாட்டார்கள்." காலக்கெடுவுக்கு முன்பே, எச்சரிக்கை விடுவதற்காக அருகிலுள்ள பள்ளிகள் மீது குண்டு மழை பெய்யத் தொடங்கின.



ஜனவரி 14, 2009 அன்று அவர் வலைப்பதிவில் எழுதினார். "பள்ளி ஒரு நாள் மீண்டும் திறக்கப்படும் என்று நான் நம்புகிறேன், ஆனால் நான் அந்த கட்டிடத்தை பார்த்த போது, மீண்டும் இங்கு வரமாட்டேன் என்பது போல் தோன்றியது" ஆனால் தொடர்ந்து எதிர்த்தார். "அவர்கள் எங்களைப் பள்ளிக்குச் செல்வதைத் தடுக்கலாம், ஆனால் நாங்கள் படிப்பதை அவர்களால் தடுக்க முடியாது!"



ஆனால் குண்டுகளால் மலாலாவை அமைதிப்படுத்த முடியவில்லை. பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன் (பிபிசி) பள்ளி மூடல்களைப் பற்றி ஒரு பெண்ணின் வலைப்பதிவு ஒன்றை உருவாக்க நினைத்தது. அதில் அந்த பெண் கல்வி மறுக்கப்படுவதை எப்படி உணர்ந்தார் என்பதை நேரடியாக எழுத வேண்டும். சிறை, அடி மற்றும் குண்டுகளுக்கு பயந்து, அவளுடைய நண்பர்கள் அனைவரும் மறுத்துவிட்டனர். மலாலா முன்வந்தார்.

நீண்ட காலத்திற்கு முன்பு பிரிட்டிஷ் அடக்குமுறைக்கு எதிராகப் போராடிய பாகிஸ்தானிய பிரமுகர் குல் மகாய்யை தனது பேனா பெயராக தேர்வு செய்தார். பாகிஸ்தானில் இணையமும் மின்சார சேவையும் நம்பகத்தன்மையற்றதாக இருந்தது. எனவே குல் மகாய் அடுத்த இரண்டு மாதங்களுக்கு பிபிசி நிருபரிடம் தொலைபேசியில் பேசி தனது வலைப்பதிவைத் அவர் மூலம் எழுதினார். இந்த வலைப்பதிவு முதன்முதலில் உருது மொழியில் ஜனவரி 3, 2009 அன்று தோன்றியது. விரைவில் மலாலாவின் வலைப்பதிவு பிரபலமடைந்தது, பிபிசி அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தது.



மலாலா போன்ற ஆர்வலர்கள் மேலும் மேலும் கோபமடைந்தனர். இறுதியாக, தாலிபான்கள் 10 வயது மற்றும் அதற்கும் குறைவான சிறுமிகளை பள்ளிக்கு செல்ல அனுமதிக்கத் தொடங்கினர். ஆனால் மலாலாவுக்கு வயது 11. அவளும் அவளுடைய தோழிகளும் நீல நிற பள்ளி சீருடையை வீட்டிலேயே வைத்து விட்டு, தெருவோர ஆடைகளை உடுத்தி, புத்தகங்களை சால்வைக்கு அடியில் மறைத்து வைத்துக்கொண்டு, இளையவர்கள் போல் நடித்து பள்ளிக்கு சென்றனர். அவர்களின் வயதைப் பற்றி பொய் சொல்வது மிகவும் ஆபத்தானது. பிடிபட்டால், மாணவிகளும் அவர்களின் ஆசிரியரும் பகிரங்கமாக தாக்கப்பட்டிருப்பார்கள் அல்லது தூக்கிலிடப்பட்டிருப்பார்கள்.

அங்கு ஒவ்வொரு நாளும் ஆபத்து அதிகரித்தது. பாகிஸ்தான் ராணுவம் தாலிபான்களை எதிர்த்துப் போரிடத் தொடங்கியது. துப்பாக்கிச் சத்தமும் அலறல்களும் காற்றை நிரப்பின. எதிர்க்கும் பள்ளி மாணவிகள் உட்பட யாரும் தெருக்களில் செல்லத் துணியவில்லை. மே 2009 இல் இராணுவம், அனைவரும் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று அறிவித்தது. கார்கள், மோட்டார் சைக்கிள்கள், டிரக்குகள், மற்றும் கழுதை வண்டிகள் உடைமைகளை குவித்து அகன்ற சாலையை நிறைத்தது. ஸ்வாட் பள்ளத்தாக்கிலிருந்து 2 மில்லியன் மக்கள் வெளியேறுவதை தாலிபான் உறுப்பினர்கள் தங்கள் இயந்திர துப்பாக்கிகளுக்கு பின்னால் இருந்து பார்த்தனர்.

ஒரு சிறிய பையில் சில துணிகளை திணித்தபோது மலாலாவின் முகத்தில் சூடான கண்ணீர் வழிந்தது. அவள் தன் புத்தகங்களை அடைத்தாள், ஆனால் அவளுடைய அம்மா இடம் இல்லை என்று கூறினார். அவற்றை விட்டுச் செல்ல மனம் ஏற்கவில்லை. மலாலா திரும்பி வரும்போது தனது புத்தகங்கள் இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார். மலாலாவின் தாய், தந்தை மற்றும் சகோதரர்கள் தங்கள் உயிருடன் வெளியேறத் துடித்தபடி அக்கம்பக்கத்து வேனில் குவிந்தனர். மலாலா தன் தோழியின் காரில் செருகப்பட்டாள். தாலிபான்கள் ஏற்கனவே அவளது உரிமைகள், கல்வி மற்றும் குரல் ஆகியவற்றை பறிக்க முயன்றனர். தாலிபான் தன் வீட்டிற்கு போகக்கூடாது என்று மலாலா பிரார்த்தனை செய்தார்.



ஸ்வாட் பள்ளத்தாக்குக்கு வெளியே உள்ள கிராமங்களில் அகதிகள் வெள்ளம் புகுந்தனர். ஐக்கிய நாடுகளின் அகதிகள் குழு மக்கள் தங்குவதற்கு வெள்ளைக் கூடாரங்கள் கொண்ட முகாம்களைத் திறந்தது, ஆனால் அவை விரைவில் நிரம்பி வழிந்தன. மோசமான சுகாதாரம் நோய் பரவுவதற்கு வழிவகுத்தது. தாலிபான்கள் முகாம்களுக்குள் ஊடுருவிய வதந்திகள் சோர்வடைந்த இதயங்களில் அச்சத்தைத் தூண்டின. யூசுஃப்சாய் குடும்பம் அங்குள்ள உறவினர் வீட்டில் தங்கும் அதிர்ஷ்டம் இருந்தது. ஆனால் அவர்களை மிங்கோராவிலிருந்து காரில் கூட்டி வந்த குடும்பம் வேறு இடத்திற்குச் சென்று கொண்டிருந்தனர். கார் இல்லாமல் யூசுஃப்சாய் குடும்பம் 16 மைல்கள் சூடான தூசி நிறைந்த பாதையில் நடந்தார்கள்.





மலாலாவின் 12வது பிறந்தநாள் ஜூலையில் வந்தது, ஆனால் கொண்டாட்டம் இல்லை. கேக் இல்லை. உண்மையில், யாருக்கும் பிறந்த நாள் நினைவே இல்லை. ஆனாலும் மலாலா பிறந்தநாள் வரம் வேண்டினார். அமைதியை கோரினாள்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு அவர்கள் வீடு திரும்பியபோது, சண்டை முடிவுக்கு வந்தது. ஆனால் மிங்கோரா மாறியிருந்தது. கடைகள் இடிக்கப்டு இருந்தன. எரிந்த கார்களின் எலும்புக்கூடுகள் சாலைகளில் சிதறிக் கிடந்தன. பள்ளியின் சுவர்களில் குண்டு துளைத்து இருந்தன. ஆனால் தாலிபான்கள் இருப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. சில நாட்களில் ஜியாவுதீன் மீண்டும் வகுப்புகளைத் தொடங்கினார். ஆண்களுக்கான வகுப்புகளும் பெண்களுக்கான வகுப்புகளும்!





மலாலா மீண்டும் பள்ளிக்குச் சென்றாள், ஆனால் அவளுடைய வாழ்க்கை மாறி இருந்தது. சிறுமிகளை பள்ளிக்கு செல்ல தடை விதிக்கும் தாலிபான்களின் முயற்சி சர்வதேச தலைப்புச் செய்திகளில் இருந்தது. நண்பர்களும் அண்டை வீட்டாரும் அவள் குல் மகாய் என்று யூகித்தனர். அவரது வலைப்பதிவு, பேச்சுக்கள் மற்றும் நேர்காணல்கள் மலாலாவை சர்வதேச அளவில் பிரபலமாக்கியது. தென்னாப்பிரிக்க பேராயர் டெஸ்மண்ட் டுட்டு அவரை ஒரு விருதுக்கு பரிந்துரைத்தார். பாகிஸ்தான் தனது அமைதிப் பரிசை தேசிய மலாலா அமைதிப் பரிசு என்று பெயர் மாற்றியது. 2011 ஆம் ஆண்டின் இறுதியில், மலாலாவின் வாழ்க்கை தொலைக்காட்சி, வானொலி மற்றும் செய்தித்தாள் பேட்டிகளால் நிறைந்திருந்தது. அவள் படம் எங்கும் இருந்தது.


தாலிபான்கள் ஒழிந்துவிடவில்லை என்பதை மலாலா அறிந்தார். தாலிபான் தலைவர்கள் அவளை இணையத்தில் மிரட்டத் தொடங்கினர். மேற்கத்திய நாடுகளுடன் பணிபுரிவதாகக் கூறி, மலாலா அவர்களின் கொலை பட்டியலில் இருப்பதாக அறிவித்தனர். யூசுப்சாய் குடும்பத்தினரை அங்கிருந்து வெளியேறுமாறு போலீசார் எச்சரித்தனர்.

ஆனால் மலாலா ஒளிந்து கொள்ள மறுத்துவிட்டார்.
அவள் அமைதியாக இருக்க மறுத்தாள்.




மலாலாவின் தாய் டோர் பெகாய் தனது மகளின் பாதுகாப்பு குறித்து அஞ்சினார். பள்ளி அவர்களின் வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் இருந்தபோதிலும், டோர் பெக்காய் மலாலாவை பள்ளி பேருந்தில் செல்ல வற்புறுத்தினார். பயம் இருந்தபோதிலும், அவர் தன் மகளைப் பற்றி பெருமிதம் கொண்டார். உண்மையில், மலாலா தனது தாயையை பள்ளிக்குச் செல்ல தூண்டினார். டோர் பெகாய் தனது முதல் பள்ளி பாடத்தை அக்டோபர் 9, 2012 அன்று திட்டமிட்டார்.

டோர் பெகாய் தனது முதல் பாடத்திற்காக பள்ளிக்கு வந்தபோது, மலாலாவும் அவளுடைய தோழிகளும் வீட்டிற்கு செல்ல பள்ளி பேருந்தில் ஏறினர். தார்ப்பாய் கூரையின் கீழ் பெஞ்சுகளில் அமர்ந்து சிரித்துப் பாடினர். திடீரென பஸ் ஸ்தம்பித்து நின்றது. ஒரு மனிதன் தார்ப்பாய்யைத் தூக்கினான்.




"யார் இங்கே மலாலா?"

யாரும் பேசவில்லை. ஒரே அசைவு, சிறுமிகளின் கண்கள்; அது தங்கள் தோழியின் மீது அக்கறையுடன் ஓடியது. அதுவே போதுமானதாக இருந்தது. அந்த நபர் மலாலாவை நோக்கி துப்பாக்கியை காட்டினார்.



மூன்று தோட்டாக்கள் அங்கே அதிர்வை உண்டாக்கியது.



பேருந்து ஓட்டுநர் மலாலாவை அவரது தோழிகளான ஷாஜியா மற்றும் கைனத் ஆகியோருடன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். குழப்பத்தில் நேரம் கழிந்தது. தெருக்களில் செய்தி பரவியதும், பத்திரிகையாளர்கள் மருத்துவமனையை அடைத்தனர். மற்ற பள்ளித் தலைவர்களிடம் பேசிக்கொண்டிருந்த ஜியாவுதீனின் போன் ஒலித்தது. “மலாலாவுக்காக பிரார்த்தனை செய்யுங்கள்” என்று கூட்டத்தினரிடம் கெஞ்சிக் கொண்டே மருத்துவமனைக்கு விரைந்தார்.

டோர் பெகாய் வீட்டிற்கு வந்தவுடன் அக்கம்பக்கத்தினர் கெட்ட செய்தியை அவரிடம் தெரிவித்தனர் . மலாலாவை ஹெலிகாப்டரில் வேறு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதாக நண்பர் ஒருவர் கூறினார். மலாலாவின் ஹெலிகாப்டர் மேலே பறப்பதைப் பார்க்க டோர் பெக்காய் மற்றும் அவரது அண்டை வீட்டார் கூரைக்கு விரைந்தனர். தலை தாவணியை காற்றில் தூக்கி, "கடவுளே. அவளை உன்னிடம் ஒப்படைக்கிறேன்" என்று வேண்டினார்.






மணித்துளிகள் பல நாட்களாக ஆகின, ஆனால் மலாலாவுக்கு அது தெரியவில்லை. அவள் மூளை வீங்கியது. அவள் மயக்கமான நிலையில் இருந்த போது, தாலிபான்கள் சிறுமியை "பிழைக்கப் போவதில்லை" என்று அறிவித்தனர். மேலும் அவள் உயிர் பிழைத்தால் மீண்டும் குறிவைக்கப்படுவாள் என்றனர்.

அவரது மூளையில் ஏற்பட்ட வீக்கத்தைக் குறைக்க மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்தனர். பின்னர் ஒரு தொற்று அவளைக் சாவின் விளிம்பிற்கு தள்ளியது. இறுதியில் அறுவை சிகிச்சைக்காகவும் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கவும், மலாலா இங்கிலாந்தில் உள்ள பர்மிங்ஹாமில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். தாலிபான்களால் சுடப்பட்ட சிறுமி பற்றிய செய்தி உலகம் முழுவதும் பரவியது. கல்விக்காகப் போராடிய சிறுமி இப்போது உயிருக்குப் போராடுகிறார். ஆயிரக் கணக்கான அட்டைகள் அவளுக்காக வந்தன. நூற்றுக்கணக்கான பொம்மைகள் மற்றும் பூக்கள் மருத்துவமனையில் கொட்டப்பட்டன. ஆனால் மலாலா மிகவும் விரும்பிது அவரது பள்ளிப் புத்தகங்களைத்தான்.



அடுத்த சில மாதங்களில் மலாலாவுக்கு மருத்துவர்கள் பல அறுவை சிகிச்சைகளைச் செய்தனர். அறுவைசிகிச்சை நிபுணர்கள் அவளது தொங்கிய கண்ணை சரிசெய்து, அவளது முக நரம்புகளை சரிசெய்தனர், அதனால் அவள் சிரித்தாள். அவள் காதில் கேட்கும் கருவியைப் பொருத்தினார்கள். மூன்று மாதங்கள் மருத்துவமனையில் தங்கியிருந்தாள். அந்த நேரத்தில் மிங்கோராவில் அவளது பள்ளி நண்பர்கள் அவளுக்காக ஒரு இருக்கையை காலியாக வைத்திருந்தார்கள்.

தோட்டாக்கள் மலாலாவை நீண்ட நாட்கள் அமைதிப்படுத்தவில்லை. ஜூலை 12, 2013 அன்று, ஐக்கிய நாடுகள் சபையில் உலகத் தலைவர்களுக்கு முன்பாக அவர் உரை நிகழ்த்தினார். "ஒரு குழந்தை, ஒரு ஆசிரியர், ஒரு புத்தகம் மற்றும் ஒரு பேனா உலகத்தை மாற்றும்" என்று அவர் அறிவித்தார். கல்வியின் உரிமைக்காகப் போராடிய சிறுமிக்கு பார்வையாளர்கள் எழுந்து நின்று கைத்தட்டலுடன் பாராட்டினர்.



மலாலா பற்றி மேலும்

பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் உள்ள ஸ்வாட் பள்ளத்தாக்கில் மலாலாவின் வீடு உள்ளது. ஆப்கானிஸ்தானுக்கு அருகில் உள்ளதால், கலாச்சார மற்றும் வரலாற்று உறவுகளை ஆப்கானிடம் பகிர்ந்து கொள்கிறது. செப்டம்பர் 11, 2001 அன்று பயங்கரவாதிகள் அமெரிக்காவை தாக்கிய பிறகு, அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ஆப்கானிஸ்தானுக்கு படைகளை அனுப்பியது. அந்த பகுதியில் தாலிபான்கள் மிகவும் வலுவாக வளர்ந்தனர், மேலும் தாலிபான் உறுப்பினர்கள் பலர் இராணுவ ஆக்கிரமிப்பின் போது ஸ்வாட் பள்ளத்தாக்குக்கு சென்றனர். அங்கு தாலிபான்கள் தங்கள் கருத்துக்களை பாகிஸ்தான் மக்கள் மீது திணித்தனர்.


மலாலாவைத் தாக்கிய தோட்டா அவளது இடது கண் குழிக்கு மேலே நுழைந்து, அவள் முகத்தில் இறங்கி, தோளில் பட்டது. முதலில் மருத்துவர்கள் அவளுக்கு பெரிய காயம் இல்லை என்று நம்பினர், ஆனால் பின்னர் அவரது காயங்கள் உயிருக்கு ஆபத்தானவை என்று தெரிந்தது. அவளது மூளை, முக நரம்புகள், செவிப்புலன் அனைத்தும் பாதிக்கப்பட்டன. அவரது மூளையில் ஏற்பட்ட வீக்கத்தைப் போக்க, மருத்துவர்கள் அவரது மண்டை ஓட்டின் ஒரு பகுதியை அகற்றினர். பின்னர் அவர்கள் அகற்றப்பட்ட மண்டை ஓட்டை ஒரு உலோகத் தகடு மூலம் மாற்றினர். அவரது தோழிகளான ஷாஜியா மற்றும் கைனத் ஆகியோர் லேசான காயத்துடன் தப்பினர்.


இங்கிலாந்தின் பர்மிங்காம் மருத்துவமனை மலாலாவுக்கு ஆயிரக்கணக்கான வாழ்த்து அட்டைகள் பரிசுகள் வந்து குவிந்தன. குறிப்பாக ஒரு பரிசை அவள் பொக்கிஷமாக வைத்திருந்தாள்.

மறைந்த பெனாசிர் பூட்டோவின் குழந்தைகள் தங்கள் தாயின் இரண்டு சால்வைகளை அனுப்பி இருந்தார்கள். பூட்டோ படுகொலை செய்யப்படும் வரை பாகிஸ்தானின் பிரதமராக இருந்தார். மலாலா தனது ஹீரோவாக பூட்டோவை எண்ணி இருந்தார். ஐக்கிய நாடுகள் சபையில் பேசும்போது பெருமையுடன் பூட்டோவின் வெள்ளை சால்வை அணிந்திருந்தார்.

துப்பாக்கிச் சூடு நடந்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, மலாலாவைச் சுட்ட 10 பேர் கொண்ட குழுவை பாகிஸ்தான் ராணுவம் கைது செய்தது. ஆனால் அவருக்கு எதிராக தாலிபான்கள் தொடர்ந்து மிரட்டல் விடுத்து வருகின்றனர்.

துப்பாக்கிச் சூடு நடந்து பல மாதங்களுக்குப் பிறகு மலாலா பள்ளிக்குத் திரும்பினார். ஆனால் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் காரணமாக, மிங்கோராவின் இருக்கைக்கு அவளால் செல்ல முடியவில்லை. அவளும் அவளுடைய குடும்பமும் இப்போது பர்மிங்காமில் வசிக்கிறார்கள். அவள் அங்கு தனது கல்வியைத் தொடர்கிறாள். அவள் ஒரு நாள் பாகிஸ்தானுக்குத் திரும்பலாம், துப்பாக்கிகளுடன் அல்ல, கல்வி அறிவு என்ற ஆயுதத்துடன். அவளும் அவள் தந்தையும் கல்வி பற்றி தொடர்ந்து பேசுகிறார்கள். பாகிஸ்தான் போன்ற நாடுகளில் கல்விக்கு நிதியளிக்கும் அமைப்பையும் மலாலா தொடங்கி உள்ளார். "ஒவ்வொரு வீட்டிலும் அமைதி" மற்றும் "உலகில் உள்ள ஒவ்வொரு ஆணுக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் கல்வி" ஆகியவற்றை நோக்கி தொடர்ந்து பணியாற்றுவதாக அவர் உறுதியளித்தார்.




"ஒரு குழந்தை, ஒரு ஆசிரியர்,
ஒரு புத்தகம் மற்றும் ஒரு
பேனா உலகத்தை மாற்றும்."
-மலாலா யூசுப்சாய்